P.R.NO: 65 நாள்: 27.11.2017

# பத்திரிக்கை செய்தி

---

தமிழக அரசு செயல்படுத்தி வரும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள அனைத்து குடும்பத்தினருக்கும் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்திற்கு இது வரை **7,73,531** ஸ்மார்ட் கார்டு (மின்னணு குடும்ப அட்டைகள்) அச்சடித்து வரப்பெற்று குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் **83,707** குடும்ப அட்டைகளில் புகைப்படம் இல்லாமலும், பிறந்த தேதி பதிவின்றியும், குடும்ப தலைவர் பெயர் குறிப்பிடாமலும், கணவர்/தகப்பனார் பெயர் இல்லாமலும் முகவரி சரியாக பதிவு செய்யப்படாமலும், பின்கோடு இல்லாமலும் மற்றும் குடும்ப உறுப்பினர் பெயர்கள் காலியாக உள்ளதாலும் மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்க கால தாமதம் ஏற்பட்டுள்ளது. தகுதியுள்ள குடும்பத்தினர் எவருக்கும் குடும்ப அட்டை இல்லை என நிலையினை அகற்றி, மின்னணு குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 15 வட்டங்களிலும் 28.11.2017 முதல் 03.12.2017 வரை சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. எனவே பொது மக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி புதிய மின்னணு குடும்ப அட்டை பெற மனு செய்து பயன்பெறுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

---

ந.க.எண். ண6/11250/16

மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்
திருநெல்வேலி. நாள்: .11.2017.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

27/11/17

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.